எல்லா இடங்களிலும் அப்படி நடக்கிறது என்று பொதுமைப்படுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிச் சொல்லக்கூடாது, அதுதான்.

செல்வி க. பாலபாரதி: நடக்கிற இடங்களைப் பற்றி நாம் புகார் கொடுக்கிறபோது நடவடிக்கை எடுப்பதில்லை. அதிலேதான் பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட புகார்கள் வரக்கூடிய நேரத்தில் உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. (மணியடிக்கப்பெற்றது) மகளிர் காவலர்களுக்கான சீருடை, அவர்களுடைய பிரசவ நேரங்களில் அதற்கான விடுமுறை, இவை போன்றவற்றில் அவர்களுக்குச் சலுகைகள் வழங்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, தமிழகக் காவல் துறையினருடைய அடக்குமுறைகள் தொடரக் கூடாது, தொழிலாளிகள், விவசாயிகள்மீது அது ஏவிவிடப்படக் கூடாது, அவற்றிலே இந்த அரசு கவனமாக இருந்து, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) உறுப்பினர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு)

5. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15-3-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். பேரவை முன்னவர் அவர்கள், தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 15-3-2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

[2005 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (15-3-2005) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-3-2005) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

43. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்திய சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

44. 2003-2004 ஆம் ஆண்டிற்கான கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

45. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

46. 2003-2004 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)